# ஒலுவில் அமுதன் கவிதைகள்



ரக்ஸானா வெளியீட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலுவில் அமுதன்

# கவிதைகள்

இலக்கியச் சுடர்மணி
ஒலுவில் அமுதன்

**OLUVIL AMUTHAN
KAVITHAIKAL**

ரக்ஸானா வெளியீட்டகம்
அக்கரைப்பற்று - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : ஒலுவில் அமுதன் கவிதைகள்

நூலின் வகை : கவிதைகள்

ஆசிரியர் : ஒலுவில் அமுதன் (ஆ. அலாவுதீன்)

ஆசிரியர் முகவரி : 67 புதுப்பள்ளி வீதி, அக்கரைப்பற்று - 05. (இலங்கை)

தொலைபேசி : 067 - 2278339

எழுத்தளவு : 11 புள்ளி

அச்சுப்பதிப்பு : 2004 ஒக்டோபர் 27

பதிப்பகம் : செலக்ஷன் ஓப்செட் - அக்கரைப்பற்று.

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

பிரதிகள் : 800

பக்கங்கள் : 60

கணனி வடிவமைப்பு : எஃப்கே கொம்பியூட்டர்ஸ் - அரசயடி.

வெளியீடு : ரக்ஸானா வெளியீட்டகம் அக்கரைப்பற்று - 05.

ISBN No. : 955-8642-03-7

விலை 100/=



## ஒலுவில் அமுதன் இதுவரை எழுதிய நூல்கள்

1) மணக்கோலம் (1988) கவிதை
2) மரணம் வரும் வரைக்கும் (1999) கவிதை
3) கலையாத மேகங்கள் (1999) சிறுகதை
4) நாம் ஒன்று நினைக்க (2000) நாவல்
5) மனங்களிலே நிறங்கள் (2001) சிறுகதை
6) கரையைத் தொடாத அலைகள் (2002) நாவல்
7) கூடில்லா குருவிகள் (2002) சிறுவர்கதை
8) நூலறுந்த பட்டம் (2003) சிறுகதை
9) ஒலுவில் அமுதன் கவிதைகள் (2004) கவிதை



# ஒலுவில் அமுதன் கவிதைகள் ஒரு சமகால மதிப்பீடு

– கலாபூஷணம் மருதூர்வாணர் (ஈழபாரதி)

''சருகானவர்கள்''

ஒரு மனிதனின் விடாமுயற்சிகள், நல்ல செயற்பாடுகள், நேரிய சிந்தனைகளால் சமூகத்தில் உயரப் புகழப்படும்போது சிலர் மனக் கிலேசம், பொறாமை காரணமாக அவர்களை கெடுப்பதும் மற்றவர்களுடன் இல்லாமை பொல்லாமை சொல்வதும் பலருக்கு ஒருவகை பொழுது போக்காகும். இவர்களால் மனித சமூகத்துக்கு ஒரு பிரயோசனமுமில்லை.

ஒரு மரம் அல்லது பூந்தோட்டம் செழிப்பாக, பூக்களாக இருக்கும் போதுதான் புகழ்வார்கள். பூக்களை பயன்படுத்துவார்கள். பூக்கள் சருகான பின்னர் அதனை எவரும் பயன்படுத்துவதுமில்லை. புகழ்வதுமில்லை.

ஒலுவில் அமுதன் நவமணியில் எழுதிய ''சருகானவர்கள்'' கவிதையும் மேற்கூறிய தத்துவ ஒப்புநோக்காகும்.

உயர்வோரைப் பார்த்து
சதித்திட்டம் போடும்
கிணற்றுத் தவளைகள்
எலிக்குவைத்த பொறிகளில்
அகப்பட்ட பல்லிகளாய்
வாலறுபடும் போது
நாய்க்கு தோல் தேங்காய்
எதற்கு ...?'' எனும் புதுக்கவிதைத் தொடரில்

பொறாமைக் குணமுள்ளவர்களின் வாழ்வின் முடிவுகள் சருகின் நிலையை ஒத்ததே என்று கோடிட்டு காட்டியுள்ளார் ஒலுவில் அமுதன்.

இலக்கியச்சுடர் மணி என்ற அவரின் பட்டம் இக்காரணகாரிய கவிதைகளால் அவருக்கு பொருத்தமானதே !

**''தேர்தலே வேண்டாம்''**

எனும் கவிதை வீரகேசரி வாரவெளியீட்டில் வெளிவந்துள்ளது. இக்கவிதை வாசகர்களை மிக மிக கவர்ந்ததாகும்.

''வல்லரசு நாடுகளே
வருடம் ஐந்து கடந்தே எதிர்நோக்கும்
சில்லறை நாடான எம்நாட்டிற்கு
இருவருடமொரு தேர்தல் தேவைதானா?
கஷ்டப்பட்டு சேர்த்த பணத்தை
கடலில் போடுவதா?
சமாதானத்தை நிலைநிறுத்த
பேச்சுவார்த்தைக்கு முடிவுகாண
அனைவருமே ஒன்றுபடுங்கள்
அதன்பின்னர் தேர்தலை யோசிப்போம்''
என்ற கவிதைத் தொடரில்
''ஒன்றாய் இருந்து உண்டவர்களும்
ஒற்றுமையாய் காலம் கடத்தியவர்களும்
ஆளுக்கொரு கட்சியில் தாவி
அடிதடி சண்டையில் இறங்கி
பாட்டன், முப்பாட்டன் குறைநிறைபேசி
கோபத்தை ஏற்படுத்தி
குண்டுகளும் துப்பாக்கிகளும்
உயிர்களை உறிஞ்சும் அந்நிலை வேண்டாம்
அதற்கு தேர்தலே வேண்டாம்''

என்று இலக்கியச்சுடர்விடும் மணிகளாக கவிதை படைத்துள்ளார் ஒலுவில் அமுதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்கவிதை என்ற பெயரில் இப்போது உலகமெல்லாம் புற்றீசல்களைப் போல் நாளாந்தம் பல ஏடுகள் சஞ்சிகைகளில் துண்டுகள் துணுக்குகளாகப் பல்லாயிரம் வந்து கொண்டிருக்கின்றன. கவிதை என்ற பெயரில் "வார்த்தை ஜாலங்கள்" அதனை எழுதியவர்களுக்கே பொருள் விளங்குவதில்லையாம் என்று பிரபல கவிஞர் மு.மேத்தாவும் கூறியுள்ளார்.

புதுக்கவிதை எனும் அரக்கன் சுடுகாட்டில் ஏறி பொசுங்கியுள்ளான் என்று மேத்தா வேதனையில் கூறியுள்ளார்.

ஒலுவில் அமுதன் அவர்களின் புதுக்கவிதைகளை இங்கு நான் ஆராயும்போது மேத்தா கூறிய கவிஞர்களுக்கு அமுதன் ஒரு கலங்கரை விளக்கம்போல எவருக்கும் இலகுவில் விளங்கக்கூடிய சொல் அம்புகளிலும், நாசூக்கான வசனங்களிலும் தேன்சுவை ததும்ப பல நூறுகவிதைகளை எழுதியுள்ளார்.

நான் புதுக்கவிதையை எதிர்ப்பவன் என்று பலர் சாடியுள்ளார்கள். வைரமுத்து, கவிக்கோ, மேமன் கவி, அஸ்வர் போன்றவர்களின் புதிர்க்கவிதைகளையும் பல முறை பத்திரிகைகளில் சொல்லம்பு கொண்டு துளைத்திருக்கிறேன்.

ஒலுவில் அமுதன் கவிதைகளில் பொருள், சொல்நயம், சந்தம், இசைப்போசை விரவிவருவதைக் காணலாம். இலங்கையிலே சிறந்த படைப்பாளர்களில் ஒருவராக "ஒலுவில் அமுதன்" பிரகாசிக்கிறார் என்ற உண்மையை எதிரிகளும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.


கலாபூஷணம் மருதூர்வாணர் (ஈழபாரதி)
சமாதானம் ஆசிரியர்
201, அல்ஹம்றா வீதி - மருதமுனை.


## என்னிதயங்களோடு ஒரு நிமிடம் .

உங்களின் அன்பு ஆதரவினால்தான் என்னால் ஒன்பதாவது நூலையும் வெளியிட முடிந்தது. தொடர்ந்தும் உங்களின் உதவியை எதிர்பார்த்தவனாக உள்ளேன்.

இரண்டொரு நூல்களை வெளியிட்டவர்களே பெரும் எழுத்தாளன், கவிஞன் என்று தலைக்கனம் பிடித்து திரிகின்றார்கள். இவர்களின் மத்தியில் 9வது நூலையும் வெளியிட்டு பத்தாவது நூலை எழுதிக்கொண்டிருக்கிறேன் என்றால் பெருமைக்கு உரியவன் யார்? என்பதை நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள்.

எட்டுமணி நேர வேலையில் உள்ளவர்கள், சிலநாட்கள் வீட்டில் இருப்பவர்கள், எழுத நேரமில்லை என்று சாக்கு போக்கு சொல்லலாம். அவர்களால் எழுதமுடியாது என்பதே உண்மை நிலையாகும். தினமும் பத்து மணித்தியாலத்திற்கு மேல் கடமை புரியும் நான் வருடம் ஒரு நூலை வெளியிட்டு வருகின்றேன். அது மாத்திரமல்ல. பத்திரிகை சஞ்சிகைகளுக்கும் எழுதுகின்றேன்.

கற்பனைவளம், எழுத்தாற்றல் குறைந்தாலும் அவர்களின் வாய் சவடால் மட்டும் குறையாது. எவ்வளவோ கருக்கள், விஷயங்கள் என் இதயத்தில் நிறைந்துள்ளன. வேளை கிடைக்கின்றபோது அவற்றையெல்லாம் எழுத்துருவில் வடித்துவருகின்றேன். இப்போது சமுதாய சீர்திருத்த நாவல் ஒன்றினை எழுதிவருகின்றேன். இந்நாவல் எனக்கு பெரும் புகழைத்தரும். விரைவில் எதிர்பாருங்கள்.

*அன்புடன்*
*இலக்கியச்சுடர் மணி*
*ஒலுவில் அமுதன்*


67, புதுப்பள்ளி வீதி,
அக்கரைப்பற்று - 06
(இலங்கை)
தொலைபேசி 067 - 2278339


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தை படைப்போர்க்கும்
இங்கிதமே சுவைப்போர்க்கும்
இந்நூலை சமர்ப்பித்து
இன்புற்று மிதக்கின்றேன்.
ஆசிரியர்



# சருகானவர்கள்..



சூடேறிய உண்மைகள்
சுதந்திரம் பெற்ற போராட்டங்கள்
முடிவில்லாத பேச்சுக்கள்
காய்க்காத மரங்கள்
கருக்கட்டாத காரிகைகள்
என்ன பயன்தர.?

♦♦♦

வார்த்தை தீட்டி
வாய்களால் கோபுரம்தரும்
வீணர்கள்
தோல்விகளில் துவண்டவர்கள்
வார்த்தைகளால்
வீரர்கள் ஆனவர்கள்
இவர்களெல்லாம்
பாதையை தடுத்த சுவர்கள்

♦♦♦

உயர்வோரைப்பார்த்து
சதித்திட்டம் போடும்
கிணற்றுத்தவளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலிக்குவைத்த பொறிகளில்
அகப்பட்ட பல்லிகளாய்
வாலறுபடும்போது
நாய்க்கு தோல்தேங்காய்
எதற்கு? எனும் நினைவு
நெஞ்சமெலாம் ஊர
தவறு தலையில் சுமையாகும் !

♠♠♠

சூரியனைப்பார்த்து
பல்லிழிக்காதீர்கள்
சூரியன் இல்லையெனில்
உலகே இருட்டில்
தடுமாறும் ...!
நீ எப்போதோ
புதைந்து போயிருப்பாய் !

[illegible]
30.11.2003



# கவிஞர்?



கவிஞா உனக்கு – இப்போதே
கருப்பஞ்சம் வந்ததுவா?
அறுபது வயது கடந்தும்
அழகாய் கருக்கூட்டி
காலத்தை கண்ணாடியில்
காட்டும் படைப்புக்களை
தந்து விடுகிறார்களே ...!
கவிஞா ... உனக்கு
ஐம்பதுக்கு முன்னே
கருப்பஞ்சம் வந்து
இடுப்புக்கு கீழே
இறக்கிவிட்டதே !

♠♠♠

மந்திரியையும்
அவரை சுற்றுவோரையும்
சேர்த்து புகழ்பாடின்
பாட்டாளியின் வயிறு
குளிர்ந்திடுமா?
அவர்கள் சேவையின் பெயரால்
ஏழைகளை எடுத்தெறிவது
நின்றிடுமா தோழா?
பாட்டாளியின் பரிதவிப்பை
பக்கம் பக்கமாக பாடலாமே
யுத்தத்தின் தாக்கம்பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகம் புத்தகமாக எழுதலாமே
சேவையாளன் என்று
போலிவேடம் போடுவோரை
புட்டுக்காட்டலாமே !
கண்முன்னே ஒன்றும்
காணாமல் ஒன்றும்
உரைப்பவர் செயலை
தடுத்திட பேனாவை
எடுத்திடு தோழா ....!
இவைகள் மூளையில்
ஊறாவிட்டால்
பேனாவை மடித்து
பேசாமல் இருந்திடு
வீணாக வரைந்து
அவமானம் காணாதே !

♠♠♠

நான் சிறுவனாய் இருக்கையில்
பெரும் கவி நானென
செப்பினாய் நீயே
இளைஞன் ஆனதும்
என்கீழே வரைகின்றாய்
இது உன்னை தாழ்த்துமே
எழுதின் எழுதுக
இக்கால கருக்கொண்டு !
இன்றேல் உறங்கி
இனிய கனவு காண்க !

நௌஸரி
13.05.2001



# வசந்தம் வரவேண்டும்



இரவிலும் பஸ் ஓட வேண்டும்
அதிலேறி அமர்ந்து தூங்கி
கனவுகண்டு கொழும்பு வந்து
தூக்கம் கலைந்து இறங்க வேண்டும்
சோதனைச்சாவடிகளும்
வேதனை நிலையங்களும் விலகிட வேண்டும்

♠♠♠

ஊரிலே தொழில் புரிந்து
அன்றைய நாளை கடமைக்காக்கி
இரவுணவுண்டு கொழும்பு போக
பஸ் வேண்டும்
இரவுத் தூக்கத்தில் இருக்கும்போது
கொழும்பு வந்து எங்களை துயிலெழுப்ப வேண்டும்

♠♠♠

நாயும் பூனையும் சுதந்திரமாய் உலவுதல் போன்று
மரம் செடிகள் தலை நிமிர்ந்து நிற்பது போன்று
மனிதர்கள் யாவரும் சுதந்திரத்தை சுகித்து
இப்புவி எங்கினும் சென்று வரும்
நிலைவர வேண்டும்
மனம் மகிழ சமாதானம்
நின்று நிலைத்திட வேண்டும் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தாரும் சுனிலும் சுரேஷும்

கைகோர்த்து உலாவிட வேண்டும்

மும்தாஜும் மெனிக்காவும் மைதிலியும்

ஒன்றாக உணவுண்ண வேண்டும்

பேதமை எல்லாமே நீங்கிட வேண்டும்

வீண்பழி சொல்லலும் வீழ்ந்திட வேண்டும் !

♦♦♦

ஏக்கத்தில் தூங்கி தூங்காமல் விழித்து

சுமைகளை தாங்கி வாழ்வது நின்றிட

சமாதானம் நிலைத்திட வேண்டும்

சந்துபொந்து எங்கும் யாருக்கு யாரும்

பயமில்லாமல் வாழும் நிலை வந்திட வேண்டும் !

♦♦♦



யுத்தத்தால் அழிவுகள் ஆயிரமாயிரம்

உயிர் உடைமை நாட்டின் செல்வம்

எல்லாமே மண்ணாகி மறைந்துவிடும்

இந்நிலை மாறி செல்வம் பெருகி வறுமை நீங்கி

வாழ்வு வளம் பெற யுத்தமே நீ ....

பித்துப்பிடித்து செத்திட வேண்டும்

ஜெகம் செழிக்க வேண்டும் !

வீரகேசரி வாரவெளியீடு
14.04.2002



# பொன் மகள்



வட்ட நிலா

பொட்டுவைத்து

கிட்டவந்ததோ?

எட்டநிற்கும்

தூரம் வந்து

வித்தை காட்டுதோ?

♦♦♦

கட்டை மேனி

கலைந்த கூந்தல்

பட்டை தீட்டுதோ

முட்டவந்து

வெட்கம் தின்று

முடங்கி விட்டதோ?

♦♦♦

என்னைக் கண்டு

எட்டுவைத்து கிட்ட

வந்ததோ

எதிர்நோக்க வேண்டி

துணி வின்றி

விட்டதோ

குலுங்கிவரும்

அழகினிலே

கிறங்கி போனேனே

குதூகலிக்கும்

நினைவினிலே

இறங்கி விட்டேனே !

தினகரன் வாரமஞ்சரி
30.11.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்த வழி

திண்டாடுகின்றாய் என்று
கடவுள்
கைநிறையத் தந்தபோது
கண்தெரியாமால்
பணக்காரனையும்
இழிவாக நினைத்தாய்
படிப்பாளியையும்
முட்டாளாய் மொழிந்தாய்
நீயே உயர்வென்று
நெஞ்சுயர்த்தி நின்றாய் !

♠♠♠

வந்தவை போனவழி தெரியாது
வெறும் கையானபோது ....
பணக்காரனுக்கும் உனக்கும்
வித்தியாசம் தெரிந்தது !
படித்தவனுக்கும் உனக்கும்
வேறுபாடுதெரிந்தது !
இப்போது நீயே சொல்
பணக்காரனா? படிப்பாளியா?
ஒன்றுமே இல்லாத
வெறும்வாளிதான் .!



# தேர்தலே வேண்டாம்

தேர்தல் நமக்கு வேண்டாம்
திரும்பி வசைபாடுவதும்
தெருக்களெல்லாம் திருவிழாவாகி
போஸ்டரால்
புனிதமான சுவர்களும் மாசுபட்டு
தூய்மை இழப்பதை விரும்பவில்லை
அதனால் தேர்தல் நமக்கு வேண்டாம் !
ஒன்றாய் இருந்து உண்டவர்களும்
ஒற்றுமையாய் காலம்
கடத்தியவர்களும்
ஆளுக்கொரு கட்சியில் தாவி
அடிதடி சண்டையில் இறங்கி
பாட்டன் முப்பாட்டன் குறைநிறைபேசி
கோபத்தை ஏற்படுத்தி
குண்டுகளும் துப்பாக்கிகளும்
உயிரை உறிஞ்சும் அந்தநிலை வேண்டாம்
அதற்கு தேர்தலே நீ வரவேண்டாம்

♠♠♠

எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு
பதவி வெறியேறி
சில கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து
தேர்தலை நடத்ததிட்டம் போடுகின்றனர் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலின் பின்னர் மீண்டும்
வேதாளம் முருங்கையில் கதையாகி
சில உயிர்களும் பலியாகும்
இந்த தேர்தலே வேண்டாம்!

♠♠♠

மக்களுக்குரிய பணம் கோடிக்கணக்கில்
தேர்தல் ரூபத்தில் விரயமாகி
நாட்டை மேலும் நலிவுறச் செய்யும்
தேர்தல் அரக்கன் வேண்டவே வேண்டாம்!
பணத்தையும் இழந்து
சில உயிர்களையும் இழக்கும்
தேர்தல் எதற்கு?

♠♠♠

வல்லரசு நாடுகளே ..
வருடம் ஐந்து கடந்தே எதிர்நோக்கும்
சில்லறை நாடான எம்நாட்டிற்கு
இருவருடமொரு தேர்தல் தேவைதானா?
கஷ்டப்பட்டு சேர்த்த பணத்தை
கடலில் போடுவதா?
நாட்டை உயர்த்த
சமாதானத்தை நிலைநிறுத்த
பேச்சுவார்த்தைக்கு முடிவுகூரண
அனைவருமே ஒன்று படுங்கள்
அதன் பின்னர் தேர்தலை
யோசிப்போம்!

வீரகேசரி வாரவெளியீடு
08.02.2004



# அழையா அழைப்பு!

அற்பர்கள் எனக்கழைப்பு அனுப்பார்
அதற்கு நான் கவலைப்படவேயில்லை
கல்விமான்களும் பேராசிரியர்களும்
மனிதப்புனிதர்களும் என்னை அழைத்து
வாழ்த்தி பாராட்டிப்பரிசும் தருகின்றபோது
அற்பர்களின் சொற்ப நேர கூத்துக்கு
அழைப்பில்லாவிடின் எனக்கு என்ன?
என்பேனாவில் மையுண்டு
எழுத எத்தனையோ விடயங்களுண்டு
கற்பனைவற்றிய நீங்கள் ஆண்டிகள் கூடி
மடம் கட்டியது போன்று அமைப்பேற்படுத்தி
முக்கி முனகி ஒன்றை அல்லது இரண்டை
அச்சாக்கிவிடின்
உச்சக்கோப்பில் ஏறியவர்களாகி விடுவீர்களா?
சாதனைபுரிய முனைந்தால்
சந்தியிலே உங்களை காணமுடிவதில்லையே!
போட்டிக்கு எழுதி
பரிசுவாங்கிய பழக்கம் ஏதுமுண்டோ?
கவிதையிலே முட்டிமோதி மூக்குடைபட்டதுண்டு
வானுக்கேறியவனைப்பார்த்து பொறாமைப்பட்டு
ஏன் நீங்கள் பொசுங்கிக்கொள்கிறீர்கள்?
எனக்கு நீங்கள் அழைப்புவிடாமல் இருக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை உயர் பீடங்களிலிருந்து
எனக்கு அழைப்புக்கள் வருகின்றன என்பதும்
உங்களுக்குத் தெரியும் !
உங்களை யாரென்று அவர்கள்
நினைத்து பார்க்கப்போவதில்லை !
உங்களுக்கு அழைப்பை நீங்களே
விடுத்துக்கொள்ளுங்கள் !

வீரகேசரி வாரவெளியீடு
08.06.2003

# தோல்வியும் வெறியும்

அரசியலுக்காக
ஆளையாள் தின்கின்ற
மிருகத் தோன்றல்கள்
மிகைத்து விட்டார்கள் !
மிருகம்
ஆட்சிபுரியும் இடத்தில்
தோல்வி
கொலுவீற்றிருக்கும்!
ஏவல் நாய்கள்
கடித்துக் குதறிவிட்டு
தோல்வியின் பின்னர்
வெறிபிடித்து சாகவரும் !
உங்களுக்கே ..
நல்லவர்களுக்கல்ல !

வாரவெளியீடு வீரகேசரி
04.11.2001



# தேர்தல் விஞ்ஞாபனம்

புதிதாய் ஒரு கட்சி தொடங்கிட வேண்டும்
பொய்நிறைய சொல்வோர் அதில் சேர்ந்திட வேண்டும்
வாக்குறுதிகளை நிறைய கொடுப்பவர் வேண்டும்
வென்றபின்னே எல்லாம் மறந்து
இறுமாந்து திரியவேண்டும்
ஐம்பது வீதமல்ல அரச ஊழியர்க்கு
நூறுசதவீதம் சம்பள உயர்வு
சும்மாதிரிவோரும் மாதப்படிபெற
மகத்துவமாய் திட்டமுண்டு !

♦♦♦

பத்துமாதம் ஒரு பிள்ளை பெறும் தாய்க்கு
வீரத்தாய் விருது வழங்குவோம்
திருடிக் கொழுப்போருக்கு பொலிஸில் வேலை வாய்ப்பு
கப்பம் வாங்குவோருக்கு காரியாலய வேலை

♦♦♦

பரீட்சையில் சித்திபெற முடியாதவர்களுக்கு
போதனாசாலையை உருவாக்கி பயிற்சியளிப்போம்
அதற்கும் சரிவராவிட்டால் மூளைமாற்று சிகிச்சை
கொடுக்கலாமா என்பதை ஆராய
வெளிநாட்டு நிபுணர்களை வரவழைப்போம்
கணக்கு பாடத்தில் குண்டுவாங்கியவர்களுக்கு
ஓடிட்டர் வேலைகொடுப்போம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம சேவையாளர் அத்தாட்சி கடிதம் ஒன்று
உறுதிப்படுத்த ஒரு நூறு பெறலாம் என்ற
சுற்று நிருபத்தை வெளியிடுவோம்
சிலர் சிரிப்பது எனக்கு தெரிகிறது
ஆனால் அதிகம் பேர் எங்களுக்கு வாக்களித்து
வெல்ல வைக்கத்தான் போகிறார்கள்
பொறுத்து பாருங்கள்
வயது வந்தவர்களுக்கும் நல்ல திட்டமுண்டு !

♠♠♠

முடிந்தால் புதிதாக திருமணம் செய்யலாம்
ஊக்குவிப்பு பணம் வழங்கப்படும்
தற்கொலை செய்துகொள்ளும் வயோதிபர்களின்
குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்படும்
மேலும் பல சலுகைகள் விஞ்ஞாபனத்திலே ...
வாங்கிப்பார்த்து வாக்கை தாருங்கள்
வாக்குறுதிகளால் வெற்றி நிச்சயம் !



வீரகேசரி
23.05.2004



# சொந்தம்

இதயத்தின் உள்ளே வந்து
இடம்பிடித்தாய்
என்னிதயத்தின் இதயமாகி
வாழ்வில்
உதயம் தந்தாய் !
தோல்விகளின் காயங்களுக்கு
அன்பு மருந்தேற்றி
ஆறவைத்தாய் ....
தழும்புகள் கூட தடயமில்லாது
ஆறிவிட்டன !
இப்போது விருந்தல்லவா தருகின்றாய்
வீரனாகி
உலா வருகின்றேன்
என்னினியவளே
என்றும் நானுனக்குரியவனே !



நவமணி
25.01.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதர்சனம் !

விளக்குகள் ஒளிர்ந்து
காற்றுக் கூத்தாடியின்
சர்வாதிகாரத்தினால்
இருளை இழுத்துவந்து
போர்த்தியபின்
இருக்கும் நிலை !

♠♠♠

மகிழ வேண்டிய
மனங்களில்
நெருப்பை மூட்டி
எண்ணெய் ஊற்றி
எரிய விடுவது போல
தொழிலாளர்களுக்கு
தொல்லை
நெருப்புகள்
தொடர்ச்சியாக...
உங்கள் செயல்கள் ... !

♠♠♠

இறைவனின்
நேர்மைத் தராசில்
உங்களை



நிறுக்கின்றபோது
பாவப்பாரம்
கீழே இழுக்கும் ...!

♠♠♠

என்றோ ஒருநாள்
ஓடிய வாகனம்
நகர மறுப்பது போல
உங்களுக்குரியதை
அனுபவிக்க முடியாத
இயலாமை தோன்றி
உயர்வையே உறுஞ்சி
கீழ் நிலைக்குத் தள்ளும்
நீதி தேவனிடம்
நீ என்ன ...?

புத்தொலி
07.12.2003

# திருமணம்

கனவு முத்தத்திற்கு
கடிவாளம் !
கடிதக்கிறுக்கலுக்கு
குட்டை !
ஏக்கங்களுக்கு புனர்வாழ்வு!
இதயங்களுக்கு ஒத்தனம் !
எதிர்கால வாரிசுக்கு அடித்தளம் !



வீரகேசரி வாரவெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருகக்குணம்

மனித உறவுகளில்
மிருக குணங்களே
மிகைத்தவை
மற்றவனை
அவமானப் படுத்திட
தலைவிரிக்கின்றன
சுயநல தூக்கத்துக்கு
போர்வையாய்
உதவுகின்றன ...
மனித மனத்தை
அறுத்து வதைத்திட
கத்தியாய் மாறுகின்றன
மனிதனை விட்டு
இம்மிருகக்குணம்
மறைந்தே போகாதோ
மாநிலம் சிறக்காதோ

[illegible]
06.06.2004



# சிறப்புக்குரிய தினம்

மேடையிலே ஆரோகணத்தில் சத்தமிட்டு
பிரசாரம் செய்கின்றவர்களின்
தினமல்ல மேதினம் ...
இரத்தத்தை வியர்வையாக்கி
உடம்பை நோவிற்காக்கி
தினம் உண்ணவே சிரமப்படும்
தொழிலாளர்களை போற்றும் தினம் மேதினம் !

♠♠♠

தொழிலாளர்களின் பெருமைபேசி
நாட்டிற்குதவும் வலிமைகாட்டி
உழைப்பின் பெருமைக்கு உதவாதிருக்கும்
தினமல்ல மேதினம் ...
உழைப்போரின் மகிமைபேண
உரிய கூலி கொடுத்திடுவதை
நியாயப்படுத்தும் தினமே மேதினம் !

♠♠♠

வார்த்தையாலே உழைப்பாளியை புகழ்ந்து
துயரங்களுக்கு துளியும் உதவாது
பேச்சில் மட்டும் பெருமை பேசும்
தினமல்ல மேதினம் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் செல்வமாம் அவர்களுக்கு
நலன்கள் யாவும் அளிப்பதற்கு
திட்டம் தீட்டி செயற்படுத்த
சிறந்த தினமே மேதினம் !

♠♠♠

அரசியல்வாதிகளும் அன்றையதினத்தை
நெஞ்சில் வைத்து
அலட்டும் தினமல்ல மேதினம் ...
உழைத்து களைத்து துயர்படும்
உயரிய கூட்டத்தினருக்கு
உரிய இடமளித்து கௌரவிக்கும்
தினமே மேதினம் !



வீரகேசரி
28.04.2002



# பெறுபேறு

மிருகத்தை
ஊட்டி வளர்த்து
மிருகமானாயோ?
வட்டி கொடுத்து
வயிற்றை நிரப்பி
உயர நினைத்தாயோ
உன்னை
ஓட்டிய அனைத்தும்
ஒட்டுண்ணியாய் விழும்
அப்போது
தவறை உணர்ந்து
கண்ணீர் வடிப்பாய் !
அவ்வேளை உன் மூச்சும்
உன்னைச் சுடும்
கூட இருந்தவர்களும்
குத்த நினைப்பார்கள் !

நவமணி
20.06.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவிவகாரம்

உலக வரைபடத்தில்
சிறுபொட்டு
இந்த நாடு
உலகில் உயிர்க்கொலை
பச்சையாக நடைபெறும்
இரத்தக்கறை படிந்த நாடு !

♠♠♠

எந்நாட்டிற்குச் சென்று
புதினத்தாளை
புரட்டுகின்ற போதும்
எம்நாட்டின் உயிரிழப்பு
உச்சியில் நிற்கும்

♠♠♠

சிறுபான்மையினருக்கு
உரிமை கொடுக்க
உள்ளமில்லாத
பெரும்பான்மையினர்
சிறு உதவிகள் வழங்கி
உயிரை பிடுங்குவது
இந்நாட்டின் உரிமை



சிறுபான்மையினருக்கல்ல
என்பதை பறைசாற்றும்
எண்பத்துமூன்று ஜுலையில்
தொடங்கி
தொடருகிறதே
மிலேனியத்திலும்
பிணம் தின்னும்
கழுகாகி விட்டீர்களே !

♠♠♠

இன்னும் எங்கெல்லாம்
சிறுபான்மை இன அழிப்பு
முடிவேதும் கிடையாதா ..?



நவமணி
27.01.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்விற்கு . . . !

மலர்கள் செடியிலழகு
உதிர்ந்தால்
கொடியே அழகு
மங்கை துணையிலழகு
பிரிந்தால்
துயரே உலகு !

♦♦♦

அன்பு உறவுக்கு
இரும்பு
வெறுப்பு
பிரிவுக்கு நெருப்பு
பொறுமை
மனதுக்கு வெளிச்சம்
பெண்மை
பேச்சுக்கு மென்மை



♦♦♦

வாய்வலிமை
வாழ்வுக்கு இழப்பு
அடக்கம்



பெண்மையின் அணிகலன்
முழக்கம்
பிரிவுக்கு திறப்பு
வாய்மை
வாழ்வுக்கு வளம் தரும்
வாழ்க்கை
மனிதனுக்கு புகழ்தரும் !

நவமணி
22.06.2003

# எங்கே ?

அந்நியரின்
ஆட்சியை கவிழ்த்துவிட்டு
சுதந்திரம் பெற்றோமென
சொல்கின்றீரே _
எங்காவது உன்னால்
துணிந்து செல்ல
தைரியம் உண்டா?
வீட்டைவிட்டு
புறப்பட்டால்
மீண்டு வருவாயென
நிச்சயித்து கூற முடியுமா?
அப்படியாயின்
எங்கே காணும் சுதந்திரம்?
வார்த்தையை தொலைத்து விட்டு
வாடி நிற்காதே !

நவமணி
20.05.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்புள்ளி

இனிமையாம் பாடல்கள்
எத்தனையோ இருக்கின்றபோது
குத்துப்பாடல்களை ஏன்
குதூகலமாய் பாடுகின்றாய்
மற்றவனை குத்திவிட்டால்
நாம் உயர்வோமென்றா
நினைக்கின்றாய்?

♦♦♦

உன்பாடல்களால்
நெஞ்சோர்ந்தோர் ஏராளம்
வெந்துபோய்
வேதனையுற்றோர் தாராளம்
இருக்க
நல்லவனாய் ஏன் நடிக்கின்றாய் ?

♦♦♦

உதவியோர்க்கு
உதவாக்கரையானாய்
ஏணியையே எடுத்தெறிந்து
சாணியையே அப்பிக்கொண்டு
சாதனையாளராக பிதற்றுகிறாய்
நல்லவர்களின் மனங்களால்தான்
நீ மலர்ந்தாய்
அவர்களாலேதான் நீ கருகி
சாதனைப்பட்டியல்
சாக்கடைக்கு போகும் !

நவமணி
28.04.2002



# தாவல்கள்

வருடமொரு தேர்தல்
வந்திடவேண்டும்
நானும் கொஞ்சம் பணம்
சேர்த்திட வேண்டும் !
சென்ற தேர்தலில்
நின்றேன் ஒருகட்சி
பல லட்சங்கள்
என் பையில் !
நான் நிற்கும் கட்சி
தோற்றாலும்
என் எண்ணம்
ஈடேறுகிறது ... !
கைநிறையப்பணம்
பயணம் செய்ய வாகனம்
கூடவர
வெறிமருந்தை நாடும்
தோழர்கள் !
அடுத்த தேர்தலுக்கு
எந்தக் கட்சியை
ஆதரிப்பதென
சிந்திக்க தேவையில்லை
பையை நிரப்புவோர்க்கு
கையை தூக்குவேன் !

ஞாயிறு தினக்குரல்
02.12.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி மாறும் !

இரவுக்கு முந்தி பகலா
பகலுக்கு முந்தி இரவா ?
முடிவில்லா கதைக்கு
மூளையை செலவழித்து
விடிவா காணப் போகிறீர்கள் ?

♠♠♠

உதயத்தை காணமுதல்
கற்பனை பண்ணி
களிநயம் புரியாதே ...!
வெள்ளிமலை காட்டுவோரின்
உள்ளத்தை உணர்ந்து கொள் !

♠♠♠

உன்னிரத்தம்
வியர்வையாக
வெளியேறியது மட்டுமா ?
தேயிலைச் செடியிலும் பட்டமை
அவர்களின் புறக்கண்களுக்கு
புரியாவிட்டாலும்
தேநீர் பருகும் போது
பார்த்து வியந்ததுண்டா ?

இரத்தத்தையே
தொழிலாளி தரும் போது ...
செல்வங்களையே தரும்போது
அவனை ஒரு மனிதனாக
மனதில் பதித்ததுண்டா ?
அவனுக்குரியதையும் எடுத்து
கொழுத்ததுண்டு !

♠♠♠

காலம் மாறும் வேளை ...
காட்சி மாறும் !
முதலாளியும் முதலில்லாத
வெறும் வாளியாகின்ற வேளை
மனச்சாட்சிக்கு மதிப்பளித்து
காட்சி மாற்றத்தை
தடுத்துக் கொள்ளுங்கள் ...!



வீரகேசரி வார வெளியீடு
14.10.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெகிழ்ச்சி !

நிலவென்றான்
உயிரென்றான்
நெருங்க முதல் !
சுவையென்றான்
தேன் கனியென்றான்
இணைந்த பின்னால் !
விஷமென்றான்
தேள் என்றான்
கை கழுவியபின் !
நரகமென்றான்
தோல்வியென்றான்
பிரிந்த பின்னே ...!



வீரகேசரி வார வெளியீடு
28.04.2002



# நாடே உயரும்..!

அட்டைகடித்தும் அரவம் – தீண்டியும்
விட்டார்களா தொழிலை?
வீணாய் இருந்தார்களா புவியில்?
நாளும் பொழுதும் நாட்டின் – நலனுக்கு
இட்டாரே பணியை ....
இந்நாட்டை வளர்த்தாரே உயிராய் !

♠♠♠

கல்லும் முள்ளும் காலைக்கீற
கொழுந்தைப் பறித்தாரே ...
வருந்த வருந்த நாட்டை உயர்த்தி
எலும்பாய் போனாரே ...
துரைமார் எண்ணி மதித்தனரா..?
எள்ளி நகைத்தனரே !

♠♠♠

கொழுந்தைக் கிள்ள
கரங்கள் மறுத்தால்
நீங்கள் கொழுப்பது எங்ஙனம் ?
வருந்த வருந்த
தொல்லை கொடுத்தால்
அவர்கள் வாழ்வது எங்ஙனம் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு மனைவியும் மலையேற
அழகு மகளும் கொழுந்துகிள்ள
பச்சைப்பாலகன் பசியோடிருக்க
பசிதாகத்துடன் பணிபுரியும்
பண்பான மாந்தரின் வேதனத்தை
இருமடங்காக்கி கொடுத்திடுக !
நாடே உயரும் அப்பொழுது
நலமாய் செழிக்கும் – கொழுந்துகளும் !

வீரகேசரி
20.02.2000

## இறுதிக்காலம்

பிரயாணக்களைப்பின் போது
சற்று இளைப்பாற
நிழல்தேடி இவ்வுலகில்
உட்கார்ந்தவர்கள் நாம் !
இதனை மறந்து
இங்கேயே என்றும்
ஆட்சி நடத்தலாமென
அகங்காரம்
கொள்ளாதீர்கள் !

ஞாயிறு தினக்குரல்



## அழுகின்ற துப்பாக்கிகள்

நள்ளிரவு
உயிர்களின் உயிரனு
உறங்கிய நேரம்
மின்சாரம் விளக்குகளை
அணைத்து
இரவின் ஆட்சிக்கு
வழிவிட்டவேளை ...

♦♦♦

உயிர்களின் அழிவுக்கு
துப்பாக்கிகள் தான்
காரணியென்று
மூச்சுவிடாமல்
முணுமுணுத்தார்கள்
மனிதர்கள் !

♦♦♦

துப்பாக்கியோ
அழுது புலம்புகின்றது
என்னை நீங்கள்
இயக்காவிட்டால்
கொடிய வேலை
செய்திருப்பேனா?

நவமணி
23.09.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை
பாதுகாப்புக்கன்றி
அழிவுக்கு பயன்படுத்தும்
நீங்கள் நல்லவர்களா?
நெஞ்சைத் தொட்டு
சொல்லுங்கள் !

கையெழுத்து

# நெருங்க நெருங்க

உன்னடையில்
புதுவித நாட்டியம்
உருவாகலாம் !
உன்னிடையில்
உலகமே மயங்கலாம் !
உன்னழகில்
இளைஞர்கள்
மெய் மறக்கலாம் !
பழகிப் பார்த்தாலோ
உறவு பிரியலாம் !



வீரகேசரி வாரவெளியீடு



# உன்னையே சிந்தித்துப்பார் ..!

மனிதா உன்னையே நீ சிந்தித்துப்பார்
இது எனக்குத்தந்த கவித்தலைப்பு
ஒவ்வொரு மனிதனும் தன்னையே சிந்திக்க வேண்டியது
முக்கிய பொறுப்பு !
நாடென்ன செய்தது என்ற வினாக்குறியில் இருக்காதே
நீயென்ன செய்தாய் என்பதற்கு விடையளிக்க – நட.
இன்று ... ஒவ்வொரு மனிதனும் மற்ற வனையே
குற்றம் கூறுகிறான் !
குற்றம் கூறுவதை விட்டுத் தொலைத்து
மனிதா ... உன்னையே நீ சிந்தித்துப்பார்!

நீ செய்த தவறுகளை எண்ணிப்பார்
அப்போது குற்றம் கூறும் எண்ணம் சுருங்கும்
உந்தன் குற்றப்பட்டியல் நீண்டு விரியும்
ஒவ்வொருவனும் தன்னைத்தானே சிந்தித்தால்
உலகம் உருப்படும் – கலகம் அடங்கிவிடும்
அமைதி தோன்றிவிடும் – அன்பு வளர்ந்து விடும்!

வட்டிவாங்கி குட்டிதின்னும் மட்டமானவனும்
திட்டித்தீர்க்கிறான் மற்றவன் சிறுபிழை கண்டு!
குடித்துவெறித்து கூத்தாடுவோனும் உளறுகிறான்
மற்றவன் சொன்ன பொய்யை நினைத்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபசாரத்தில் இறங்கி முத்திரை பதிக்கப்பட்டமுதியவரும்
அரசியலை வெறுத்து எண்ணெயில் பப்படமாய்
பொரிந்து தள்ளுகிறார்!

நீங்கள் எல்லாம் நல்லவர்களா? சற்று
எண்ணிப்பாருங்கள்
உங்கள் செயலை எந்த உலை மூடியால்
மூடப்பார்க்கிறீர்கள் !
அவரவர் உணர்ந்து திருந்திட உலகம் திருந்தும்
மனிதா உன்னையே நீ சிந்தித்துப்பார்
புனிதா என்றழைக்கும் வழியைப்பார்!
தத்தமது பிழைகளை மறந்துவிட்டு
மற்றவரைக் குத்தும் விஷப்பூச்சி வேலை வேண்டாம்!
புத்தகம் சுமக்கும் கழுதைகளாய் இருந்து விட்டு
பிழைகூறி புகழ் சேர்க்கும் போலி எண்ணம் வேண்டாம்!
நீ நாக்கில் நல்வார்த்தை சேர்த்தாலும்
போக்கில் பிழை இருப்பதை மறைக்கவா முடியும்!
மனிதா ... உன்னையே நீ சிந்தித்துப் பார்க்க வில்லையே
ஊரையா ஏமாற்றப் பார்க்கிறாய் ...?

உன் கவிதை பெண்களைத் தாக்குகின்றதென
என் அன்பர்கள் சொன்னார்கள்!
உள்ளதை உள்ளபடி சொன்னது குற்றமா?



எனக்கு மறைத்து எழுதும் போலிப்புகழ் பிடிக்காது!
துணிந்து பாவங்கள் புரிவோரில்
பெண்கள் தான் அதிகம்!
தீய பெண்களைப் பாராட்டியா எழுதுவது?
என் கவிதையைக் குற்றம் கூறாதே!
சுற்றத்தைப் பார் எதிர்முற்றத்தைப் பார்!

நான் புனிதன் என்று வாதிடவரவில்லை
நான் விடும் பிழைகளை நண்பர்களிடமும் கூறியுள்ளேன்!
திருந்தத்தான் பார்க்கிறேன் பலவற்றை
வருந்தத்தான் செய்கிறேன் சிலவற்றால்
நான் திருந்த உதவிடும் யா அல்லாஹ்
யாவரும் திருந்திடவும் வழிபுரி!

நான் மரணிக்கும் முன்னராவது
சமாதானப் பூமியைச் சந்திக்க வேண்டும்!
நிம்மதி உலகைத் தரிசிக்க வேண்டும்!
அதன் பின் கண்மூடி உறங்கி களிப்புற வேண்டும்!

ஞாயிறு தினக்குரல்

அக்கரைப்பற்றில் 16.04.99 கவிஞர்கள்
படையெடுப்பு கவியரங்கில்
பாடப்பட்டகவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாதங்கள்

இனவாதம் மொழிவாதம்
ஜாதிபேதம் ஊர்வாதம்
பேசத்தொடங்கிவிட்டீர்கள்
உங்களுக்கு
இந்த திமிர்வாதம்
நிறைந்ததால்
இறைவன் தந்த வாதமாக
புதுப்புது
வாதமும் வருத்தமும்
உடலில் நிறைந்துள்ளதே
இதற்கு உங்கள்
எதிர்வாதத்தை பயன்படுத்தின்
இனி என்னென்ன
புதுப்புது வாதங்கள்
வந்துங்களைச் சேருமோ?



ஞாயிறு தினக்குரல்



# நாளை ஒருநாள்...!

அப்பாவி நாடுகளை
நெருப்பிலிட்டு
சாம்பலில் பசி தீர்க்கும்
பயங்கரவாத அமெரிக்காவே ...
பயங்கரவாதத்தை
அழிக்கப் போவதாகக்கூறி
பயங்கரவாதத்தை வளர்க்கிறாயே !
வலு இல்லையேல்
மூளையிலும் குறைவு
என்ற நினைப்போ?

♠♠♠

உன் வலு ஒருநாள்
வந்தவழி போகும்போது
தெருநாயும்
கடித்துக்குதறும் !
வீரம்காட்டும் நீ
கோழையாகி
குப்புற விழுவாய் !
சொறிநாயும்
உன்னில் மலம் கழிக்கும்

நவமணி
25.08.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம் வேண்டும்!

சமாதானமே ... உன்னாட்சி
இந்நாடெல்லாம் விரிந்தோங்க வேண்டும்
கண்ணீர் காணாது மன மகிழ்வில்
மக்கள் நீந்திட வேண்டும் !

•••

சென்றவருடம் அரசும் ஆட்சியாளரும்
உன்னை சிறையில் அடைத்து
சித்திரவதை செய்து மகிழ்ந்தனரோ?
அரக்கரின் கண்களுக்கு – நீ
எதிரியாகத்தான் இருந்திருப்பாய்
சமாதானமே நீ தலைநிமிர்ந்திட வேண்டும்
அரக்கர்களை நீ அயல்நாட்டுக்கு
அனுப்பவேண்டும் !

•••

இனத்தை இனம் புரிந்து கொண்டு
மனிதாபிமானத்தை வளர்த்துக் கொண்டு
அன்பை நெஞ்சில் ஓடவிட்டு
பண்பாய் வாழ பழகிடுவோம்
பலரும் மனிதனை மதித்திடுவோம் !



நாட்டை சீர்செய்து விட்டுக்கொடுத்து
சமாதானத்தை கொண்டுவருவோம்
என்றவர்கள்
உணவிற்கு இல்லாவிட்டாலும்
கொலைக்கருவிகளுக்கு நிறைய செலவிட்டு
பிணங்களை பெருக்கி மகிழ்ந்தார்கள்
ஏமாற்றியோர் ஏமாற்றப்படுவரென்ற
விதிக்கமைய
தேர்தலின் பின் குப்புற விழுந்தார்கள்
இன்று சமாதானம் ... புன்னகை புரிகின்றது
அதனை அரவணைத்து கைதூக்கிடுவோம் !

•••

சமாதானம் என்ற நாமம் செவியேற்றதும்
உடலெங்கும் இன்பவெள்ளம்
இரத்தத்தோடு கலவையாகி
மகிழ்வை தருகிறதே
சமாதானமே நீ நிலைத்திட வேண்டும்
புதிய அரசின் தலைவரே உன் புன்னகைபோல்
இப்புவியோரும் மகிழ துணைபுரிவாய் !

வீரகேசரி வாரவெளியீடு
03.02.2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பில்லா புகை !

சில்லறைகளின்
கிறுக்கல்களுக்கு
கல்லறையா
கட்டப்போகிறார்கள் ?
சில்லறைக்கு
பொன்னறை நினைப்பு
நுகர்வோருக்கு – அது
நூர்ந்து போன நெருப்பு !

விரகேசரி
12.05.2002

# அநியாயம்

ஆளும்கட்சி ஆதரவாளர்கள்
எதிர்க்கட்சி ஆதரவாளர்களை
அடித்து துன்புறுத்தினார்கள்
பேச்சையே காணோம் !
ஆளும் கட்சியிலிருந்து கொண்டு
அடாவடித்தனம் புரிந்தோரை
எதிர்க்கட்சி ஆதரவாளர்கள்
துன்புறுத்தியபோது மட்டும்
அது ஜனநாயகம் இல்லையாம் !
அப்போ நீங்கள் செய்தது
மட்டும் நியாயமா?

விரகேசரி வாரவெளியீடு
27.01.2002



# அழகுத் தம்பி

சின்னத்தம்பி கடைசித்தம்பி
செல்லமான அழகுத்தம்பி
அன்னம்போல அசைந்தசைந்து
அன்புமொழி பேசும்தம்பி

♦♦♦

முத்துதிர சிரித்து நம்மை
முழுநிலவாய் நோக்கும் தம்பி
தத்திவரும் நடையழகில்
தங்கமென ஜொலிக்கும் தம்பி

♦♦♦

பந்தெடுத்து வீசிவிட்டு
பாய்ந்து செல்வதழகு
பலரையும் குறுவிழியால்
பார்ப்பதென்றும் அழகு !

♦♦♦

முடிவிலாவாக்கியத்தின்
முனங்கலும் இசையாம்
முத்தமிட துடிக்கின்றேன்
முகம்காட்டு என்தம்பி !



வீரகேசரிவார வெளியீடு
11.05.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீழான பேர்வழிகள்

தெருவால் நாம்
செல்லும் போது மனித ...
தெருநாய்கள் நம்மைப்பார்த்து
ஊளையிடலாம்
கேளாதவர்போல்
சென்றுவிட வேண்டும்
இல்லையெனில்
நமக்கும் நாய்க்கும்
என்ன வேறுபாடு?



நவமணி
23.03.2003



# வா ... நிலவே !

பால்நிலவே பால்நிலவே பாய்ந்துவா
பால்போன்ற ஒளியினையே உவந்து தா
நடந்துவரும் பாதையிலே நீ வருவாய்
நடுத்தெரு என்றாலும் துணை தருவாய் !

♦♦♦

யாரையும் சரிசமனாய் பார்த்திடுவாய்
யாருக்கும் தீங்கிளைக்க விரும்பிடாய்
ஏழைகளின் உலாவலுக்கு நீ துணையே
இரவுக்கு விழிதரும் உன்பணியே !

♦♦♦

கள்ளமில்லா நெஞ்சினால் களிகொள்வாய்
காலத்தின் தேவைகளை சரி செய்வாய்
உன்வரவு பலருக்கு கொண்டாட்டம்
உணராத சிலருக்கே திண்டாட்டம் !

♦♦♦

எண்ணுகின்ற வடிவமெல்லாம் முகத்திலுண்டு
செதுக்கிய சிற்பங்கள் பலதுமுண்டு
வாநிலவே வாநிலவே பால்நிலவே
உன்வரவாலே நாமெல்லாம் மகிழ்கிறோமே !

வீரகேசரி வாரவெளியீடு
09.03.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழு (கல்)

துருப்பிடித்த இரும்பு
அழுகிய மாங்காயுள்ள
நெஞ்சு
அதனாலோ
எந்த மனிதனையும் நீ
புகழவில்லை
நல்லது செய்தபோதும்
நான்குவார்த்தை இல்லை !

♠♠♠

நீ நல்லகாரியம்
செய்யாவிட்டாலும்
உன் நா
தீயை உமிழ்ந்தது
அதில் எத்தனையோ
இதயங்கள் வெந்தன ...!

♠♠♠

வேதனையை அறிய
உன் அழுகிய இதயத்துக்கு
உணர்வில்லையே
இதயத்தை அழுகவிட்ட
நீயும் நாறவே செய்வாய் !

நவமணி
06.10.2002



# புகழ் பெறவே !

நெஞ்சிலே நஞ்சு விளைந்திருக்கு
நிதமும் எண்ணம் பிழைத்திருக்கு
அன்பை நீயும் அறிவாயோ
அகிலம் செழிக்கும் அதனாலே !

♠♠♠

தீயதாய் எண்ணம் வேண்டாமே
திருந்தி செயலை நலமாக்கி
வருந்தும் மாந்தர்க் குதவிடவே
வாழ்வில் உயர்வு தான் வருமே !

♠♠♠

கணவன் மனைவி உறவைப்போல்
கண்ணில் மணியின் ஒளியைப்போல்
உதவி வாழ்ந்தால் உலகினிலே
உயர்வு மாந்தர்க் கனைவருக்கும் !

♠♠♠

பெரியோர் சிறியோர் பேதமின்றி
பிறவியில் யாவரும் சரிசமமாய்
பேணி வருவதால் பெருமுயர்வு
பேதம் பிரிவு அடங்கிவிடுமே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பாளி இன்றேல் உலகினிலே
உயர்வு உண்டோ சொல்லிடுக
பிழைக்கும் மாந்தர் அனைவருமே
பெரிதாய் நினைக்கவரும் பலனே!

♦♦♦

அடங்கா வார்த்தை பேசுவதால்
அடங்கார் மாந்தர் உணர்வீரோ
வரம்தான் கொடுத்து இருந்தாலும்
வளைந்து பேசும் புகழ்வருமே!

♦♦♦

மாந்தரை இகழ்தல் மதியற்ற
வீண்பழி என்பேன் உணர்ந்திடுக
தவறுகள் நீங்கி திருந்திடவே
தரணியும் உன்னை புகழ்ந்திடுமே!



வீரகேசரி வாரவெளியீடு



# அழகு மலர்

வகைவகையாய் பூக்கள்
வாசம் பரப்பும் பூக்கள்
தோகை தோகையாய் புவியிலே
தோள் நிமிர்த்தி நிற்குதே !

♦♦♦

மனங்கள் எல்லாம் மகிழுமே
மனத்தில் நிறைவு காணலாம்
இன்பம் பல இருக்குதே
இதழ் விரிக்கும் அழகிலே!

♦♦♦

வெள்ளை நிறமாம் மல்லிகை
விரும்பும் மணமே மல்லிகை
சிவப்பு மலர் ரோஜாவே
சிவந்த பெண்ணின் நிறமாமே!

♦♦♦

வெள்ளை ரோஜா தூய்மையை
விரும்பி நமக்கு உணர்த்துதே
மலர்கள் தரும் செடியினை
மகிழ்ந்து நட்டு வளர்ப்போமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லி மலரும் அரும்பியே
அணைத்து மகிழல் சுகம்தரும்
நெல்லிப் பூவும் நிறையுணவு
நெருக்கமானால் மலர் உறவு!

வீரகேசரி
13.04.2003

# உனக்கும் மிருகத்திற்கும்...!

உனக்கும் மிருகத்திற்கும்
அந்த ஒன்றில்தான் வித்தியாசம்!
அந்த சிரிப்பு இல்லாவிட்டால்
நூறுவீத மிருகம்!
சிரித்தாலும் மற்ற உள்ளங்களை
எரிக்க அதுபயன்படும்!
உனக்கும் மிருகத்திற்கும் வித்தியாசம்
சிரிப்பாக இருந்தாலும்
சிரிப்பிலும் மிருக தொழிற்பாடு!
இப்போது மனிதனை விட
உயர்ந்து விட்டது மிருகம்
அது சிரித்து வருத்துவதில்லை
குள்ளத்தனம் புரிவதில்லை
குறுக்கு வழி செல்வதில்லை
வட்டி கொடுத்து
வயிறு வளர்ப்பதில்லை.

நவமணி
23.08.2004



# சுதந்திரம் நிலைக்குமா?

சுதந்திரதின விழாவை
சுதந்திரமாகவே
கொண்டாட ஆசை
இதுவரை
விழாக்களை மட்டும்தான்
கொண்டாடினோம்
உண்மையில்
சிறுபான்மையினர்
பெரும்பான்மையினர்
வேறுபாடின்றி
இந்த நாட்டில்
சமத்துவம் ஓங்கி
மனிதாபிமானம்
நிலைக்க வேண்டும்!
இனங்களுக்குள் வேறுபாடு
இல்லாதொழிய வேண்டும்
உண்மையில் சுதந்திரம்
இருக்க வேண்டும்
அப்படியொரு
சுதந்திரதின விழாவைத்தான்
கொண்டாட ஆசை!

வாரவெளியீடு
வீரகேசரி
02.02.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதை மாற்றம்

இழுத்தோய்ந்த மாடு
படுத்திருந்து
வாயை குதப்பும்
சுவைத்திருந்த மாடும்
வாயை குதப்பும்
அதுபோல் மாந்தரும் ...!
விலங்குகளின் வரிசையில்
மனிதனும் ..
அதனால் எத்தனையோ
செயல்விரிப்புகள்
மற்றவர்களின் இதயத்தை
கனமாக்கும் !
வார்த்தை நெருப்புபட்டு
வெந்தவர்கள் ஏராளம்
செயல்தாக்கம் கண்டு
கண்ணீர் வடித்தவர்கள்
பலபேர்
விலங்குகளின் பாதையை
நீங்கள் மறைத்துக் கொண்டீர்கள்
அதனால் விலங்குகள்
பாதையை மாற்றி
மனிதனாக முனைகின்றன ...
நீங்கள் மிருகவழியில்
மிகைத்து விட்டீர்கள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISBN NO: 955 - 8642 - 03 - 07

sellection akkaraipattu.
hot line: 067 22 7 88 55

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org